இவன் மனம் அமைதியை-தனிமையை நாடுகின்றது. கீழேயுள்ள படிப்பறையில் ஆட்கள் அதிகமாக இருப்பார்கள் என்ற எண்ணத்தில் படிகளால் மேலேறுகின்றான். படிகளின் மேலே - வழக்கமாய் எரிகின்ற மின் வெளிச்சம் இல்லாதிருக்கின்றது. படிகளால் மேலேறுகையில் - இவனில் ஒரு 'ஜோடி' எதிர்ப்படுகின்றது அவனும் இவனைத் தெரிந்துகொண்டு 'கோமத மச்சான்?' என்கிறான். 'ஹொந்தாய்... ஹொந்தாய்' என்றவனாய் அவர்களைத்தாண்டி மேலேறுகையில் அந்த ஜோடிக்குரிய சிங்களப் பெண்ணின் கண்களில் இவன் கண்கள் பதிய... நினைவுகள் எங்கேயோ... வளாகம், வெளி அறை வாழ்க்கை என்று கூறப்பட்டிருக்கின்ற இவனுடைய நாட்களின், வளாகம் என்கின்றதான கூறிற்குள் அகப்படாது நிற்கின்ற அவளில்.

கழிந்து விட்டிருந்த நாட்களின் ஒன்றின் காலையில்தான் இவனுக்கு 'அவள்' அறிமுகமானாள்.

அந்தக்காலையில் — சந்தடிமிக்க அந்தப் பிரதான வீதியால் இவன் வளாகத்திற்கென வந்துகொண்டிருந்த பொழுதில், அவள் சைக்கிளில் இவன் மோதப் பார்த்து — அது தவிர்க்கப்பட்ட ஒரு சம்பவத்தின் மூலம்தான் இவன் அவளுக்கு அறிமுகமானாள்.

மோதலின் தப்புதலில் உண்டான அறிமுகமொன்று இவனுள் காதலாய்க் கனிகிறது.

தனக்கும் அவளிற்குமிடையில் இருந்து வருகின்ற காதலை — காதல் என்றால் இதுதானோ என்று இவன் சிலவேளைகளில் நினைத்துக் குழம்பிப்போகின்ற அந்த ஒரு கனவேயான உறவை, அது தன்னுள் வளர்ந்துவிட்ட விதத்தை — இவன் மனம் ஆராய்கிறது.

அவள் இவனைக் காண்கின்ற பொழுதுகளிலெல்லாம் — விரைந்து சைக்கிளில் வருகின்ற பொழுதில் இவனைக் கண்டு — இவன் தரிசனத்தில் தான் மனம் கொள்கின்ற ஒரு புளகாங்கிதத்தில், கண்களாலும், குழிவிழுகின்ற கன்னங்களாலும் சிரித்து -அந்தச் சிரிப்பிலேயே இவன் தன்னை இழந்து, உலகத்தை மறந்து, அவளைப் பார்த்தவனாய் நின்று விடுகையில், தான் இவளை அண்மித்ததும் தன்னுள் பெருகுகின்றஒரு நாணத்தில் தலைகுனிந்தவளாய் சைக்கிளில் இவனைத் தாண்டிச் சென்றதும் சிறிது தூரத்திற்கு புன்னகைத்துக் கொண்டே மறைவாள் அவள்

ஏதேச்சையாக அல்லது இவன் ஒரு ஊகத்தில் அவளைக் காணவேண்டி நேரம் பார்த்து வருகின்ற பொழுதுகளில் மட்டுமே ஏற்பட்டுவிடுகின்ற அவளின் சந்திப்புக்களில் இவன் தன்னை இழந்து...

இவன், தானும் அவளும் பரஸ்பரம் பரிமாறிக்கொள்கின்ற புன்னகைகளிலேயே — நாள் முழுவதும் ஒன்றாக வாழ்கின்ற மனிதர்களுடன் கொள்ளமுடியாத — ஒரு அந்நியோத்தியம் அவளில் தனக்கு வளர்ந்து கொண்டிருந்ததை உணர்ந்தான்.

பழைய வீதியால் சென்றுகொண்டிருக்கையில் இவன் மனம் — தான் அவளைச் சந்தித்து நடாத்த விரும்பும் ஒரு உரையாடலை — இவன் தனக்கும் அவளிற்குமிடையில் இறந்துவந்த தொடர்பை, அவள் அற்றுப்போகச் செய்துவிட்ட, கடைசியாக இவன் அவளைச் சந்தித்தபோது நடந்த அந்த ஒரு சம்பவத்தைப் பற்றி கேட்க நினைத்து ஒத்திகை செய்தது — இப்பொழுதும் செய்கிறது.

'மற்றவளுகளெண்டா என்ன? மூண்டு பேர்தானே... எப்பிடியும் அவளை மட்டும் கூப்பிட்டு... 'ஹலோ' அல்லது அவள் பெயரைச் சொல்லி . இஞ்சை வாரும்... உம்மோடை ஒரு கதை .. — ஒருக்கா நான் போகேக்கிடையிலை அவளுகள் அந்த வீட்டுக்குள்ளை போயிட்டா எப்பிடியெண்டாலும் வெளியே வரத்தானே வேணும்... நிற்கிறது... இண்டைக்கு இராப்பட்டாலும் சரி. நிற்கிறதுக்கு நல்ல வாசியான இடம்தானே இருக்கு -- முன்னால் வீட்டிலே தானே பெடியள் இருக்கிறுங்கள்... அவங்களோடை கதைக்கிறமாதிரி இருந்து கொண்டு ஜன்னலுக்குள்ளாலே பார்த்துக் கொண்டிருந்தா அவளுகள் எப்படியும் வரத்தானே வேணும். 'ஹலோ' அல்லது '... ...' இஞ்சை வாரும் .. உம்மோடை ஒரு கதை நான் உமக்குப் பின்னாலே திரியிறனெண்டு மட்டும் நினைச்சுப்போடாதேயும் நீர் என்ன சொல்லியவடிவோ .. நானும்தான் இந்தக் கம்பனிலை எத்தினை பொம்பிளைப் பிள்ளையளோடை பழகிறன்... ஒருத்தியாவது சொல்லுவளோ... என்னைத் தன்னோடை பிழையாப்பழகினதெண்டு... அப்பிடியிருக்க நீர்மட்டும் — நான் உண்டைக்கு உம்மோடை கதைக்கவரேக்கை என்ன சொன்னனீர்?... நான் அப்பிடியில்லையெண்டோ... என்னவோ—நான் உம்மை 'லவ்' பண்ணிறனெண்ட நினைப்பிலையோ சொன்னனீர் - நானும் அப்பிடியில்லைத் தெரியுமோ நீர் நினைக்கிறமாதிரி நான் பெட்டையளோடை திரியிற ஆள் இல்லை. சரி நீர் போட்டுவாரும்...' என்று அவளை எடுத்தெறிந்து பேசி — தன்னை, தனக்கும் அவளிற்குமிடையிலிருந்த தொடர்பை, அதில் இவனுடைய கோணத்தை தப்பாய்க் கணித்து எடுத்தெறிந்துவிட்ட அந்தச் சம்பவத்தைப் பற்றிக் கேட்கவேண்டும் என்கிறதான ஒரு எண்ணத்தின் ஒத்திக்கையில் இவன் ஆழ்கிறான்.

இவன் தனக்கும் அவளிற்குமிடையில் ஒருசந்திப்பை ஏற்படுத்த விழைந்து அவர்கள் பின்னால் அந்தப் பழையவீதியால் நடந்து சென்று கொண்டிருந்த பொழுது — அவர்கள் இவன் வருகையை தெரிந்து கொள்ளாமலேயே கலகலப்பாக தங்களுக்குள் சிரித்துக் கதைத்தவர்களாய் சென்று கொண்டிருந்தார்கள்.

இவன் மனம் - தான் அவளுடன் ஏற்படுத்திக் கொள்ளவிரும்புகின்ற ஒரு சந்திப்பிற்காக இன்னொருவித ஒத்திகையை செய்தது.

'ஹலோ' அல்லது இஞ்சைவாருமன். உம்மோடை ஒரு கதை. அவையளை போகச் சொல்லும் - அவள்கள் என்னெண்டு போவாள்கள். கொஞ்சத்தூரம் பின்னாலை நிண்டு தான் கூப்பிடவேணும். - பயப்படாதையும் ... நான் நீர் நினைக்கிற மாதிரி பிழையான ஆள் இல்லை .. அப்பிடியென்னை நினைச்சுப் போடாதையும் நானும் தான் இந்தக் கம்பனிலே எத்தினை பெம்பிளைப்பிள்ளையளோடை பழகிறன்... யாராவது சொல்லுங்களோ... என்னைத் தங்களோடை பிழையாய்ப் பழகினதெண்டு... அப்பிடியிருக்க நீர்மட்டும்... Sorry நீங்கள் மட்டும் நான் அண்டைக்கு உங்களோடை கதைக்க வரேக்கை என்ன சொன்னீங்கள். நான் அப்பிடியில்லையெண்டோ நான் நீங்கள் நினைக்கிறமாதிரி பிழையான ஆள் இல்லைத் தெரியுமோ... நான் அப்பிடியெல்லாம் நினைச்சு உங்களோடை பழகேல்லை — நான் அவளுடன் பழகினனோ? - சரி நீங்கள

போட்டுவாருங்கோ...' என்று நினைக்கையில் மனம் அதை அடக்கி மேலும் சில சொல்லி இவன விடவேண்டுமென்று நினைத்தது.

' 'ஹலோ' அல்லது ' ' இஞ்சை வாரும் உம்மோடை ஒரு கதை (எல்லா வற்றையும் மீட்டு)... இல்லை ஐசே என்னசொன்னாலும் நான் ஒண்டை மட்டும் ஒத்துக்கொள்ளுறன். எனக்கு உம் மிலை - sorry - அதுதான் உங்களிலை எனக்கு சாடையான விருப்பம் இருந்தது - இருக் கிறது உண்மைதான்...' என்றும் சொல்லி விட்டு, தான் அவளில் குவிந்து போகிற தான ஒரு வீழ்ச்சியையும் பெற்றுவிட வேண்டும் என்றும் துடிக்கிறது

ஒத்திகைகளில் மனம் குமைந்துபோய் - ஏதோ ஒன்றைத்தான் இழந்து விட்டதைப் போலவும், அந்த இழப்பை அவளில் சொல் லிக் காட்டிவிடவேண்டும் என்பதுமான ஓர் ஆர்வத்துடன் - அவர்கள் பின்னால் சென்றும் அவர்களை இவனால் சந்திக்க முடி யாமல் போய்விட்டது.

இவன் அவர்களை அடைந்துவிடுவதற் கிடையில் அவர்கள் அந்த வீட்டிற்குள் புகுந்துவிட்டதால் - இவன் முன்வீட்டறை யிலிருந்து அவளை எதிர்பார்த்துக் கொண் டிருந்த ஒரு மணித்தியாலத்திற்குமேல், — அவர்கள் அந்த வீட்டிற்கு வந்த காரொன் றிலேறி திரும்பிச் சென்றதினால் ஏமாற்ற மடைந்து தன் அறைக்குத் திரும்பியிருந் தான்.

படிகளினால் மேலேறி, மேல்மாடிக்கு வந்துவிட்ட இவன் தன் கையிலிருக்கும் File - இனுள்ளிருந்து குறிப்புக்களை எடுத் துக் கொண்டு - 'நேரம் இப்பொழுது ஏழேகால்தானிருக்கும். இன்னும் முக்கால் மணிநேரமாவது நூலகத்துள்ளிருந்து படிக் கலாம்' என்ற நினைப்பில் - File ஐ அந்த இருக்கையில் வைத்துவிட்டு தென்கிழக்கா சியா புத்தக அறையினுள் நுழைகிறான்.

படிக்கும் மேசைகளில் ஓரிருவரே இருக் கின்றனர். இங்கு முன்னிருந்து படித்து விட்டுப் போனவர்கள் ருக்கைகளி லிருந்து எடுத்துப்படித்த புத்தகங்கள் மேசைகளில் இறைந்து கிடக்கின்றன.

இவன் அங்கிருந்த மேசையொன்றில் குறிப்புகளை வைத்துவிட்டு நாற்காலியில் உட்காருகிறான். ஒன்று தனக்கு ஏற்பட்டு விட்ட ஒரு ஏமாற்றத்தினால் இவன் மனம் அலுத்துப்போக - உடலும்கூட ஒரு அச தியைக் காட்டி நிற்கிறது இவனும் கதி ரையில் சாய்ந்து - உயரமான அதன் முது கில் தன் முதுகையும் சாய்த்து, அதன் விளிம்பில் தலையையும் வைத்து, அப்படி ஒய்வெடுக்கையில் தன்னுடல் ஓர் உளை வைப் பெற்றுவிடக்கூடாது என்பதற்காக தன்னுடலை லாவகமாக இருத்தி மேலே பார்க்கிறான். இவன் தலைக்குமேல் மின் விசிறி சுழல்கிறது.

இவன் கண்கள் சுழல்கின்ற அந்த மின் விசிறியின் மையத்தில் படிந்து... அதன் மத்தியில் துலாம்பரமாகத் தெரிகின்ற வெள்ளித் தட்டில் தன்னைக் கண்டு லயித்து ... எண்ணங்களையும் நினைவுகளையும் தான் சந்தித்த, சந்திக்கின்ற பெண்களில் செலுத்தி — அப்படிச் செய்கையில் தன் னுள் ஏற்பட்டுவிடுகின்ற உணர்வுகளைத் தவிர்த்து எல்லாவற்றிற்கும் புறம்பான ஒரு உணர்வின் நிலையில் நின்று சிந்திக்க ஆரம் பிக்கின்றான்.

தன்னை மறந்து சில வேளைகளில் இவன் இப்படிப்பட்ட சிந்தனை லயங்களுக்குள் அகப்பட்டு விடுவதுண்டு. அப்பொழுதி லெல்லாம் இவன் நவரச உணர்வுகளின் கோரப்பிடியில் அகப்பட்டு. பின் அவற் றில் இருந்து தன்னை விடுவித்துக்கொண்டு — விடுவித்துக் கொண்டதாக நினைத்துக் கொண்டு அவைகளைப்பற்றி தன் எண்ணங் களைச் சுழலவிடுவான். எண்ணங்களின் சுழற்சி ஓய்ந்த பின்னர் இவனுக்குத் தன் னைப்பற்றி, தன்னைச்சுற்றி நிற்கின்ற இந்த மனிதர்களைப்பற்றி ஒரு குழப்பமே விளைந்து ஈற்றில் இது எல்லாம் 'மனிதம்' என்று சொல்லப்படுகின்ற ஒரு குழப்பமான அம் சங்களான மொத்த உருவமே என்பது இவனுக்குப் புரியும்.

இவனுள் 'அவள்' வருகிறாள்.

அந்தமாய் நிற்கின்ற — அப்படித் தோற்றுகின்ற அவளில் இருந்து முன்னால் தன்னுணர்வுகளுடன் முடிச்சுப் போடப்பட்டிருந்த பெண்கள் இவனுள் வருகிறார்கள். நினைவுக் கயிற்றின் நுனியில், இவன் மனக் கண்களில் தெரிகின்ற ஒரு முடிச்சாக ஒருத்தி வருகிறாள்.

சிறுவயதில் தன்னுடன் விளையாடித் திரிந்து — பின்னர் ஏனோ வீட்டிற்குள் அடைபட்டுப் போன அந்த ஒருத்தி... ஒரு நாள் தனக்கு தன்னிலும் மூத்த ஒருவனுடன் சுவரால் சிரித்துக் கதைத்துக்கொண்டிருக்கையில், அவளில் - அந்த ஒருத்தியில் - ஆத்திரப்பட்டு, அவளில் பொறாமைப்பட்டு பின்னர் அவளின் வீட்டில் அவளைச் சந்தித்துக் கதைத்துக்கொண்டிருந்தது — எல்லாமே சினிமாப் படங்களைப் பற்றித் தான்; இவனுக்கும் அந்த ஒருத்திக்கும் சரியான 'சிவாஜிப் பனி' — அப்போது மாறியிருந்த அந்த ஒருத்தியின் அங்கங்களில் ஒரு பரவச உணர்ச்சியோடு கண்களை மேயவிட்டது... அந்த ஒருத்தி முதல்- இன்றையதினம் தன்னுள் வியாபித்து நிற்கின்ற 'அவள்' வரை ..... எல்லோரையும் மீட்டுப்பார்க்கிறான்

பெண்களுடனான தன்னுணர்வுகளின் முடிச்சுகளில் இருவித லயிப்புகளை தான் அடைந்ருதிப்பதை இவன் உணர்கிறான். அந்த உணர்வுகளில் ஒன்றில் தான் இப்போது நினைத்துக் கொண்டிருக்கிற அவளில் — அவளுடனேயே தன்னுடைய வாழ்வின் கணங்களெல்லாம் இணைந்துவிடவேண்டும் என்பதான ஒரு தாகம்—தான் சந்தித்த பெண்கள் சிலரில் தனக்கு ஏற்பட்டிருந்ததை இவன் புரிந்து கொள்கிறான்.

அவர்களை நினைக்கையில் - இவன் இப்போது சந்திக்கின்ற 'அவள்' மட்டுமல்லாது, அவளொத்த உணர்வுகளின் முடிச்சுக்களான பெண்களெல்லாருடனும் தன்னுடைய தொடர்புகள் ஊமைத்தனமானவையாகவே போய்விட்டதிற்காக இவன் மனம் ஏங்குகிறது.

தன்னுள் பெருகிநின்ற அந்த ஒரு தாகத்துடன் இவன் அவள் பின்னால் திரிந்து - அவளைச் சந்திக்க ஒரு பொழுதில் தான விரும்புகின்ற - விரும்பி நின்ற ஒரு சாசுவதமான உறவை அவளுடன் சிருஷ்டிக்க நினைத்து, அவளைச்சந்திக்க ஒரு பொழுதில் - அவளுடன் கதைக்க முயன்ற ஒரு பொழுதில் — 'ஹலோ' என்று அழைத்துக் கொண்டு தன்னை நோக்கி வந்த இவனை - இவன் எண்ணத்தை தப்பாக புரிந்து கொண்டு 'நான் அப்படியில்லை' என்று எடுத்தெறிந்து பேசிவிட்ட அவள்; அவளில் தனக்குண்டான உணர்வுகளை தேர்வில் வைத்துக்கொண்டிருந்துவிட்டு மற்றையவித உணர்வுகளில் தன் எண்ணங்களை படிய வைக்கிறான் இவன்.

இந்த வயதின் - இருபதுகளின் முன் விலை வயதுகளில் இயல்பாகவே ஏற்பட்டு விடுகின்ற உடலின் தாகத்தில் தான் அகப்பட்டு, அவைகளுக்குத்த தான் உட்பட்டு நின்று விடுகின்ற பொழுதுகளில் தன்னுடைய நிலைகளை நினைத்துப் பார்க்கிறான்.

தன்னுடைய இந்த உணர்வுகள் தன்னளவிலேயோ, தன்னினத்தளவிலேயோ மட்டுமே தீர்க்கப்பட்டிருப்பதற்கு - தன்னுள் எழுந்து நின்ற 'அவள்'களும், தன்னுடைய இயல்பேயான - பெண்களிடத்தான பயம் கலந்த தயக்கங்களுமே ஒரு சில காரணங்களாக அமைந்துவிட்டிருப்பதை இவன் உணர்கிறான்.

இவற்றையெல்லாம் நினைக்கையில் இவனுள் வெட்கமே மேலிடுகிறது.

அந்த வெட்கத்தின் தாக்குதல்களிலும் - வாழ்வின் நெறிமுறைகள் என்று இவன் கைக்கொள்ள விரும்புகின்ற ஒரு சில கொள்கைகளினாலும் உந்தப்பட்டு இவன் தன்னை - தன்னுடைய 'அவ'ளில் அல்லது தன்னுடன் வந்து இணைந்துவிடப் போகின்ற வேறொரு அவளுடனேயே தன்னை ஒரு உண்மையானவனாக இணைத்துவிடவேண்டுமென்று நினைத்துக்கொள்கையில்... இவன் பெருமூச்செறிகிறான்.

எண்ணங்கள் இவனுள் வளர்ந்து .. எழுந்து நின்று .. பின்னர் அழிந்துபோய்க் கொண்டிருக்கிற வேளையில் நனவுலகின் ஓர் அழைப்பு இவனை இடறுகிறது.

"என்ன மச்சான்... என்ன படிக்கிறாய்"

இவன் திடுக்கிட்டவனாய், தன் முன்னால் வந்து நிற்பவனை நிமிர்ந்து பார்க்கிறான்; 'படிக்கிறானே'.

'மச்சான்... நீயோடா இதிலே இருந்தனி நான் கவனிக்கேல்லே' இவ்வளவு நேரமும் இந்தச் சிறிய மண்டபத்துள் இருந்தவனை கவனியாது விட்டுவிட்டேனே என்ற குற்ற உணர்வில் அவனை நேரே பார்க்காது- கண்களை, கம்பிவலை போடப்பட்டிருக்கும் னலினூடாக வெளியே தெரியும் - இருட் ஜன்டில் பூதாகரமாக ஆடிக்கொண்டிருக்கும் -மரங்களில் செலுத்துகின்றான். என்றாலுந் தான் அவனில் — தன் முன்னால் வந்து நிற்பவனில் எந்தவித முரண்பாடுகளுமற்ற நட்புடையவன் என்று காட்டவிரும்பி "இரன் மச்சான்" என்கிறான் இவன்.

அவனோ "அ...அ... அவ்வளவுபடிப்பு... எங்களைக் கவனியாமல் அவ்வளவு படிப்பு . ம்... நாங்கள் மட்டும் உங்களை மாதிரிப் படிச்சா எல்லாம் 'A' தான்" என்கிறான்.

நடந்து முடிந்துவிட்ட பரீட்சைகளில் இவனுடைய தோல்விகளைச் சுட்டிக்காட்டி - தன்னுடைய பெறுபேறுகளின் உயர்வையும் இவனுக்கு குத்திக்காட்டிவிட வேண்டும் என்கிறதான ஒரு வக்கரிக்கும் தாழ்வுச் சிக்கலொன்றில் - அவன் சொல்லிவிடுகின்ற சொற்கள் இவனை ஈட்டியாகக்குத்துகின்றன.

தன்னுடைய தோல்விகள் இவனுள் உறைக்க, அவைகள் தன்னுடைய இயல்பாகவே மாறிவிட்டிருக்கின்ற ஒரு 'நியதி' யை உடைத்தெறிய இவன் மனம் கங்கணம் கட்டிக்கொள்கின்ற பொழுதில் - தன்னுடைய வெற்றிகளின் இழப்பில் பெருமூச்செறிகிறான். அதுவும் தன்னருகில் வந்து நிற்பவனுக்கு தெரியக்கூடாது என்ற நினைப்பில் வெளியில் பார்த்தவனாக - அதை ஒரு சாகவதமானதாக்கி இயல்பான ஒரு மூச்சாக.

தன்னை அவன் மட்டம் தட்டுகிறான் என்பதை இவன் உணர்ந்தும், அவனில் தன்னுள் பொங்கிவருகின்ற கொதிப்பை அள்ளிக்கொட்டிவிட வேண்டும் என்று இவன் மனம் துடித்தாலும், அதை அடக்கியவனாய் "சரி நீ போகப்போறியோ மச்சான்... நீ போட்டுவா... நான் இப்பதானே வந்தனான்... கொஞ்சநேரம் இருந்திட்டு வாறன்..." என்றான்.

அவனும் இவனருகில் தரித்து - தன்னை இவன் 'காய் வெட்டுகிறான்' என்றுணர்ந்து- 'சரி நீ படிமச்சான்' என்று சொல்லி இவன் படிப்பது ஏதோ ஒரு பாவகாரியம் என்பது போலவும், அதில் தனக்கு உடன்பாடில்லை என்பதுபோலவும் இவனைப் பார்த்துக்கொண்டு விடை பெறுகிறான்

இவனும் அவனைப் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு அவன் மறைந்ததும் வாய்க்குள் முணுமுணுக்கிறான், 'பேப் .."

"சீ... விடு .. இவங்களுக்கு படிச்சுக் காட்டவேணும்" - என்று தன்னைக் கௌவிப்பிடித்திருக்கும் எண்ணங்களை உதறித் தள்ளியவனாய் தான் கொண்டு வந்திருந்த குறிப்புகளை முன்னும் பின்னுமாய் தட்டிப் பார்க்க ஆரம்பிக்கிறான். இன்று என்ன நாள் என்பதை நினைத்து — நாளையும் என்ன நாள் என்பதை நினைக்கையில் "ஓ! நாளைக்கு Tutorial குடுக்க வேணும்" என்பது இவன் மனதில் உறைக்கிறது கைகள் குறிப்புகளின் அடியில் கிடக்கும் Tutorialஐ உருவி எடுக்கின்றன. Tutorial இன் முதலாம் கேள்வியை வாசிக்கையில் அதற்குரிய பகுதியொன்றையும் படித்ததான ஞாபகம் வர மறுக்கின்றது. கேள்வியை மனதில் பதித்துக்கொண்டு அதற்கு சாதகமான குறிப்புகளைத் தேடும் முயற்சியில் இவன் கண்களும், கைகளும் ஈடுபட... மனம் மட்டும்...

இப்பொழுது சற்று முன்னால், தன் முன்னிலையில் வந்து நின்று போனவனை நினைத்துக்கொள்கிறான். அவனில் தன் எண்ணங்களை பொருத்தி — அவைகளை கல்வி, வளாகம் என்பதிலான ஒரு அச்சில் சுழல விடுகையில் ஏற்பட்டுவிடுகின்ற ஒரு வட்டத்தில் அவன் மட்டுமல்ல — அவனாயும், அவனில் வேறுபட்டதாயுமான எல்லா மனிதர்களும் வருகிறார்கள்.

பல்கலைக்கழகம் என்ற பெயரைச் சொல்லியும், பட்டப்படிப்பு என்ற பெயரைச் சொல்லியும் வீட்டில், வீதியில், சமூகத்தில் தங்களை உயர்த்திக்கொள்கிற இவர்கள் - சமுதாயம், ஒரு இனம், ஒரு நாடு என்றெல்லாம் கூட இல்லாது இந்த உலகத்திற்கே பொதுவானதும் அடிப்படையுமானதுமான கல்வியை வெறும் தொழிலடிப்படையேயான விஷயமொன்றாகக்கொண்டு அந்தக் கல்வியால் மற்றவன் அடையப்போகின்ற முன்னேற்றத்தை விரும்பாதவர்களாயும் வாழ்ந்துகொண்டு... அவ்வப்போது தேசியம், இனவிடுதலை என்றெல்லாம் சப்புக் கொட்டிக்கொள்ளமட்டும் இவர்களால் முடிகிறது.

இவர்களின் மாறாக — தாங்களுண்டு. தங்கள் படிப்புண்டு என்ற வகையில் ஒதுங்கி கொள்கை வேஷம் போடாதவர்களாய் வாழ்கின்ற சிலரையும் கல்வியொன்றையே தம்முடைய தொண்டாகக்கொண்டு வாழ்கின்ற சிலரையும் நினைக்கையில்... இவன் மனம் அவர்களில் பணிகிறது.

எண்ண ஓட்டங்களில் மீண்டும் ஓர் இடறல்.

''டேய் மச்சான்... என்னடா செய்யிறாய்...'' என்ற குரல் கேட்டு நிமிர்ந்து பார்க்கிறான் இவன். இவன் முன்னால் நின்றிருக்கும் அவன் முகத்தில் ஏன் இவ்வளவு கலவரம்; பதட்டம்? ''மச்சான்... இஞ்சை எவ்வளவு நேரமாய் இருக்கிறாய்?'' என்று கேட்டுவிட்டு, அதற்குப் பதிலே தேவையில்லாதவன் போல — அவன் கண்களில் பதட்டமும், உடலில் நடுக்கமும் துலாம் பரமாக தெரிகின்றன — ''சரி வரட்டோ மச்சான்... எனக்கு பஸ்விற்கு நேரமாச்சு'' என்று சொல்லி இவனை விட்டு விலகுகிறான்.

இவன் தனக்கு உண்டான ஒரு திகைப்பில் குழம்பிப்போக — அந்தப் படிப்பறையின் மற்றைய வாசலால் 'இவள்' நுழைகிறாள். நுழைந்தவளும் சாதாரணமாயிராத ஒரு நடுக்கம் கலந்த பார்வையுடன் இவனைப் பார்த்தவளாக, புத்தக அலுமாரியின் அருகில் சென்று புத்தகமொன்றை எடுத்துப் புரட்டுகிறாள்.

இவனுள் ஏதோ ஒன்று ஊகமாய்த் தெரிகிறது. இப்போது தன்முன்னால் வந்து நின்று ஓடிப்போனவனையும் இவளையும் சேர்த்து நினைக்கையில் 'ஓ... ஓ... என்னவோ விஷயம் நடந்திருக்கு' என்பதான ஒரு ஊகம் இவனுள் ஏற்படுகிறது. நூலகத்திற்கு வரும்போது — திடீரென இவனுள் எழுந்த விஷமத்தில் பொது அறையின் கதவுகளைத் திடீரெனத்தள்ளி ஏதேச்சையாய் நுழைந்து விட்டவனைப்போல் நடித்துக்கொண்டு மெல்லிருட்டைத் துளாவிப் பார்க்கையில் இருவர் இருவராய்... அவர்கள் இருந்த மாதிரி இவன் கண்களில் வந்து நிற்கின்றது. அம்மாதிரியான ஒரு நிலையில் இப்போது தன் முன்னால் வந்து— நின்று — ஓடிப்போனவனையும் இவளையும் நினைத்துப்பார்க்கிறான். இவனுள்ளும் உணர்வுகள் கசிய ஆரம்பிக்கின்றன.

'எனக்குத்தெரியும்... இவ ஒரு மாதியான ஆள்தான் சும்மா என்னோடை கதைக்கேக்கை ஒரு மாதிரியாத்தான் பாக்கிறவா நான் யோசிச்சது சரிதான் போல இருக்கு?

'ஓ... ஓ... விஷயம் அதுதான்போல இருக்கு ' எங்க நிண்டிருப்பினம்... அதுக்குள்ளேதான் Staff இற்கென அடித்துவிடப்பட்டிருக்கும் அறைகள் இருக்கின்ற அந்த மறைவிற்குள் நடந்திருக்கக்கூடிய காரியங்களை இவன் மனம் எண்ணுகையில் இவனுள்ளும் — தன்னை மீறிவிடுகிறதான, மறந்து விடுகிறதான ஒரு உத்வேகம் கிளைபரப்பி வியாபிக்க ஆரம்பிக்கின்றது.

இவளும் தூரத்தில் நின்று — புத்தக அலமாரியில் புத்தகங்களை தேடிக்கொண்டே இவனைப் பார்த்துக் கொள்கிறாள். இவன் மனமோ, நடந்துவிட்டிருக்கக்கூடிய அந்த நிகழ்ச்சியில் அவளை விலக்கி — தன்னைப் போட்டு, இவளையும் தன்னையும் இணைத்து கற்பனை செய்கிறது.

இவளின் சேலை தோளின் வழி சரிந்து விழுகிறது. இவன் கண்கள் 'அவை'களை திடீரெனப் பற்றிப்பிடிக்க — சரிந்து விழுகின்ற சேலையை எடுத்துப் போடுகின்ற சாட்டில் 'அவை'களைக் கைகளால் அளுத்திக் கொள்கிறாள்; 'சரியா நோகுது போலே இருக்கு'

இவன் கதிரையை பின்னுக்குத்தள்ளி எழுகிறான்

தன்னை நோக்கி வருகின்ற இவனை சந்திக்கவிரும்பாதவளாகி தன்கையில் இருக்கின்ற புத்தகத்தை முன்னும் பின்னும் புரட்டுகிறாள்.

எனினும் மிக அருகில் வந்துநின்று விடுகின்ற இவனை இயல்பாகவே வரவேற்பவள் போல இவனை நிமிர்ந்து பார்த்து, ''நீங்கள் வீட்டிற்குப் போகேல்லியோ'' என்கிறாள்.

'ஏன் ஏழு மணிக்கே மற்றையதுகளோடை போயிருக்கலாமே' என்கிறது இவன் மனம். உணர்வுகளின் வளர்ச்சியில் ஆழ்கின்ற இவன் மௌனமாகவே இவளைப் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு, ''என்ன... எப்படி...'' என்று இழுக்கிறான்.

தன்னுடலில் பரவுகின்ற ஒரு வேகத்திலும் நடுக்கத்திலும் தன் தோளை அலமாரியில் சாய்த்து ஊன்றி நின்றவனாய் இவன் கேட்கிறான் ''என்ன... எப்படி '' மீண்டும் அவள்சேலை தேளிலிருந்து நழுவுகின்றது இவள் அதைக் கைகளால் பற்றிப் பிடிப்பற்கிடையில்—இவன் கண்கள் 'அவை'களைப் பற்றிப் பிடிக்கின்றன.

தோளின் வழி சரிந்து விழுகின்ற சேலையை தோளில் எடுத்துப்போடுகின்ற சாட்டில், எல்லாமே குழம்பிப்போயிருக்கும் என்ற ஊகத்தில் கைகளை மார்பில் பதித்து மேலாடையும் சரிசெய்கையில், கண்களை மட்டும் இவன் கண்களோடு மோதவிட்டவளாய் கேட்கிறாள்; ''இஞ்சருமனப்பா... என்னோடை வீடுகாண வாருமன்''

இவன் பதிலேதுமில்லாமல் இவளில் வெறித்து நோக்கிக்கொண்டிருக்கிறான். ''என்ன... என்ன அப்பிடிப் பாக்கிறீர் இதெல்லாம் கூடாது'' என்றாள் இவன் பார்வையை செல்லமாகவே அங்கீகரிக்கிறாள்

''ஒண்டுமில்லை சும்மா'' இவன் ''ஏன் பார்க்கக்கூடாதோ'' இவன் மனம்.

''சும்மா எண்டு...''

''சும்மாதான்''

'ஆள் ஒரு மாதிரித்தான் போல இருக்கு .'' இவன் மனம்

இவனின் உடற்தசைகளில் — அவைகளின் அச்சாய் பரவியிருக்கின்ற என்புகளின் பரவுகின்ற ஒரு வேகத்தில் — பெருகுகின்ற பவத்தில் இவளை அப்படியே அமத்தி ..... விடலாம் போலிருக்கிறது.

''என்ன...'' இவள் கேட்கிறாள்.

''என்னவோ? சும்மா லெவல் அடியாதையும்... எனக்கெல்லாம் தெரியும்... நானும் கண்டிட்டன் .'' - குரல் பலமாக தெளிவாக வர மறுக்கிறது.

இரகசியமாய் அவள் முகத்தருகில் நெருங்கிக் கேட்கிறான் '' ...னோடை என்ன செய்தனீர்?''

''அ... அ '' -திகைப்புடன் தலையைக் குனிகிறாள். இவள் நெஞ்சம் 'திக்' 'திக்' என அடித்துக் கொள்வது இவனுக்குத் தெரிகிறது. இவனும் இவளையே பார்த்துக் கொண்டு நிற்கிறான்

இவளும் ஓரிரு நிமிடங்கள் தலைகுனிந்தவளாய் நின்றுவிட்டு, தனக்குள் ஏற்பட்டு விடுகின்ற நடுக்கத்தை உதறிக்கொண்டவளாய் திடீரென நிமிர்ந்து இவனைப் பார்த்துக் கேட்கிறாள்; "..... ஞேடை என்ன செய்தனுன்?"

"ஓ ஓ அதட்டி.நிரோ" இவன் மனம்.

"என்னவோ? .. சும்மா லெவல் அடியாதையும், எனக்கெல்லாம் தெரியும்."
"உமக்கென்ன தெரியும் .. எல்லாம் தெரியுமெண்ட நினைப்போ..."
"ஓ ஓ"

சில விநாடிகள் இவளை விழுங்கிவிடுவது போல் வெறித்துப் பார்த்துக்கொண்டிருக்கையில், தன்னை அதட்டிவிடுவதன்மூலம் - தன்னுடைய விஷயத்தை அமத்திவிடலாம் என்று இவள் நினைக்கிறாளென்பதை இவன் உணர்கிறான். அந்த உணர்வில் இவனுள் ஏற்பட்டு விடுகின்ற தாழ்வுமனப்பான்மையினாலும், இவளுடைய கர்வத்தினாலும் தூண்டப்பட்டு 'இவளை சும்மாவிடக் கூடாது' என்று முடிவு செய்தவனாய். எனக்கு ஒண்டும் தெரியாதெண்டோ நினைக்கிறீர் .." என்று இவன் ஆரம்பிக்கையில் பின்னால் யாரோ வருவதுபோல் ஓர் உணர்வு இவர்களுக்குள் பரவுகின்றது. இவனும் இவளும் திரும்பிப்பார்க்கிறார்கள்.

நேரம் எட்டு மணியாகிவிட்டது போலிருக்கின்றது. அருகருகே நின்றிருக்கும் இவர்களை பார்த்துக்கொண்டே — படிப்பறைக்குள் நுழைந்து யன்னல் கதவுகளை மூட ஆரம்பிக்கிறான் நூலகப் பொறுப்பாளன்.

'சரி... சரி .. வாரும் கிழைபோவம்' இவன் சொற்களுக்கு கட்டுப்பட்டவளாய் — தன்னுடைய 'குட்டு' வெளிப்பட்டுவிடப் போகிறதே என்ற அச்சத்தில் ஒன்றும் பேசாதவளாய் — இவன் பின்னால் வருகிறாள்

இவனும் தன்னுடைய குறிப்புகளை கைகளில் எடுத்துக்கொண்டு — நூலகத்தை பூட்டவந்தவனைப்பார்த்து ஒரு முறுவலை உதிர்த்துவிட்டு — இவளையும் அழைத்துக்கொண்டு வெளியேறுகிறான்.

படிகளில் இருவரும் இறங்குகிறார்கள்.

மேலேயும் கீழேயும் என்றிராத அந்த மட்டத்தில் — மறைவில் — வந்ததும், படிகளில் பரவியிருக்கின்ற இருட்டைத் துணைக்கொண்டு, தன்னுடன் இறங்குகின்ற இவளில் மோதிவிடுவதுபோலத் திரும்பிக் கேட்கிறான் "என்ன..... ஐசே..... என்ன... சொல்லுறீர்... என்னேடையும் ஒருக்கால் வாருமன்"

இவனுடைய திடீர்க்கேள்வியில் — இவள் பின்னடித்து நிற்கிறாள்.

தன்னுடைய அழைப்பிற்கான பதிலை இவன் இவள் முகத்தில் ஆராய்கையில் திடீரெனச்சிரிக்க ஆரம்பிக்கிறாள் இவள்.

சிரிக்கின்ற கண்களில் கேலிமின்ன, இதழ்க்கடையில் பொங்குகின்ற அந்தச் சிரிப்பில் இவன் கூனிக்குறுகிப்போகத்தக்கதாக - இவன் முகத்தை, இவனை நீள - அகலமாய், மேலும் - கீழுமாய், சற்றே சரிந்து நின்று விசாலமாய் பார்த்துச் சிரிக்கிறாள்.

"என்ன .. என்ன என்னடி சிரிக்கிறாய் ... வாவன்" என்றவாறு நறுமிக்கொண்டு இவனைச் சிவரோடு மேலும் பின்னடிக்கச் செய்கையில் — மேலேயும், கீழேயும் ஆரவம் கேட்கிறது.

திடீரென இவன் படிகளில் இறங்கி கீழே வந்துவிட்ட அந்த யாரோ ஒருவன் சந்தேகப்படாமல் இருக்க இவளில் திரும்பிக் கேட்கிறான், "வாருமன் .. ரீ... குடிப்பம்"

இவனுடைய பதட்டத்தில் இவளுக்கு சிரிப்புத்தான் வருகிறது.

'இவளுக்கு ஒரு சிரிப்பு .. செய்யிறதையும் செய்துபோட்டு வாடி காட்டுறன்' என்று இவன் மனம் கறுவிக்கொள்கையில் இவளில் திரும்பிக் கேட்கிறான், 'வாருமன் ...ரீ குடிப்பம்"

இவளையும் அழைத்துக்கொண்டு, பின்னால் இவள் சிரித்தபடி வருவது தன்பிடரியில் குறுகுறுப்பாகப் பரவ, உடலெங்கும் இவளை - இவள் உடலென்னும் தசைப்பிண்டத்தையும், எலும்புக்கூட்டையும் அமத்தியே நொறுக்கவேண்டும் என்பது போன்ற ஒரு மூர்க்கத்தில் இவன் துடிக்கிறான்.

இவனுடலின் ஒரு வெறியான துடிப்பில், we want pushing, They want pressing' என்று இவன் தன் நண்பர்கள் மத்தியில் பகிடியாய் சொல்லிக்கொள்கின்ற வசனத்தில் வருகின்ற - அர்த்தம் நிறைந்த அந்த ஒரு 'pushing' வினையாகி விட வேண்டும் என்ற பேரவா இழையோடுகின்றது.

கன்ரீனுக்குள் ஒருவருமில்லை. அந்த இரு சிறுவர்கள் மட்டும் கதிரைமேசைகளை ஒழுங்கு படுத்திக்கொண்டிருக்கிறார்கள்.

கைகளில் கொண்டு வந்த குறிப்புகளை வாசலினருகில் இருக்கின்ற மேசையொன்றில் விட்டெறிகிறான்.

கன்ரீனுக்குள்ளிருந்து இவனும் இவளும் வெளியேறுகிறார்கள். இவன் மனதில் நடையில் பொது அறையும் - அதன் இருட்டுமே இலக்கககி நிற்கின்றன. இவளை அதற்குள் அழைத்துச் செல்ல நினைத்து, வாருமன்... கெதியா'' என்றான்.

இவனுடைய விரைவில், வேகத்தில் - இவளை அல்வப்போது ஆக்கிரமித்து, இவளையும் இவன் என்கிறப்படுவதான இவன் சிந்தனைகளையும் தன்னுள் அடக்கிவிடுகின்றதான, 'அவள்' என்கிறப்படுவதான— அந்த ஒரு வட்டம் இப்போது சுருங்கிப் போய் எங்கோ ஒரு மூலையில்... இவன் நனவிலியில் குவிந்து, உறைந்து போய்விட ...'இவள்' என்கிறப்படுவதான ஒரு உணர்வு வட்டம், இவளையும் - இவன் என்கிறப்படுவதான இவன் சிந்தனைகளையும் தன்னுள் அடக்கி தானே ஒரு முழுவியாபகமாய்... விரைந்து விரைந்து வியாபிக்கின்றது.

தன்னை அழைத்துக்கொண்டு செல்கின்ற இவனில், இவன் பதட்டத்தில் இவளுக்கு இன்னும் சிரிப்பு நின்றபாடில்லை இவன் பின்னாலேயே வருகிறாள்.

பொது அறையின் கதவை உள்ளே தள்ளி நுழைந்து பார்க்கிறான்; 'நல்ல காலம்' அங்கு ஒருவருமில்லை.

''சரி... வாருமன் கெதியா...'' என்றவாறு வாசலில் நின்று இவளை உள்ளே அழைக்கிறான் இவன்; ''கா ட்-டி-ற-ன் வா-ரு-ம்''

இவள் ஏனோ தயங்குகிறாள். இவளுடைய தயக்கத்தில் பொறுமையிழந்தவனாகி ''வாருமன்'' என்கிறான்; இவள் கையைப் பிடித்திழுக்கிறான்; ''வாருமன்... ஐ சே...'

இவளோ அறைக்குள் பரவிக்கிடக்கிடக்கின்ற இருட்டையும், இவனின் வெறி துளிர்ந்த கண்களையும் கண்டு அஞ்சியவளாய் — இவன் கைகளை உதறியபடி ''ஆ... ஆ..... அதெல்லாம் நடக்காது... நான் அப்பிடியில்லைக்காணும்...'' என்கிறாள் இவள்.

''அப்பிடியில்லையெண்டா''

இவளோ மௌனமாக, இவனை நீர்க்கமாக பார்த்துக்கொண்டவளாய் ஏதோ சொல்ல முயல்கிறாள்; '...வேணுமெண்டா சும்மா... மேலாலை செய்யும்... மற்றதுக்கு முடியாது''

''அப்பிடியில்லையெண்டா... !''

மேல்பூச்சான ஒரு காரியத்தில் இவளையும் தன்னுடன் ஈடுபடுத்தி, தனக்கும் — இவன் முன்னால் வந்து நின்று ஒடிப்போன வலிற்குமிடையேயான கதையை அமத்திவிடவேண்டும் என்ற எண்ணத்தில், இவன் பின்னால் வந்துவிட்டவளாய் நின்றிருந்த இவள் — இவனுடைய கண்களில் தெரிகின்ற வெறியிலும் கைகளில் பரவியிருக்கின்ற பலத்திலிருந்து நடந்துவிடக்கூடிய ஒரு விபரீதத்திற்கு அஞ்சியவளாய் — அப்படிச்சொல்ல,

இவனுள் உலகமே சுழல்கிறது.

''அ... அ... என்னடி சொன்னனி...'' இவன் நா குழறுகிறது.

இவன் தனக்கும் — தன்னுடைய 'அவ' ளிற்குமிடையே ஒரு சாசுவதமான உறவை ஏற்படுத்திக் கொள்ள விரும்பி அவள் பின்னால் — அவளை ''ஹலோ'' என்று அழைத்துக்கொண்டு சென்றபொழுதில், — இவனின் அழைப்பில் இவனைத் திரும்பிப்பார்த்து, — இவனை தப்பாய் புரிந்துகொண்டவளாய் — ஒரு அற்ப ஜீவியை பார்ப்பதுபோல இவனைப்பார்த்து 'நான் அப்பிடியில்லை' என்று அவள் உதறியெறிந்தாளே அப்போதுபோல் ஆயிரது இடி முழக்கங்கள் சேர்ந்து விழுந்தம் போல .....

அவைகளின் காக்குதலில், இவனுள் இப்போது இடையிட்டு நின்ற — வியாபித்து நின்ற 'இவள்' என்கிறதான வட்டம் சிதறிப்போக.. புள்ளியாய் ஒடுங்கிப்போன 'அவள்' என்கிறதான வட்டம் சிதறிப்போக... புள்ளியாய் ஒடுங்கிப்போன 'அவள்' என்கிறதான வட்டம் மின்னலென வெளித்து — நிலைத்து, முழு இவனுமே தானாகி...

தன்னுடன் வரமறுக்கின்ற 'இவள் கண்களிலிருந்து அவளின் கண்கள் பூதாகாரமாய், இவன் முன் எழுந்து நின்று 'ஏ... அற்ப ஜீவியே' என்றிகழ்வது போலவும், அவள் குரல்' நீ அப்பிடித்தான்' என்று எக்காளமிடுவதுபோலவும்... அந்த எக்காளத்தில் இவனுள் ஏற்பட்டு நின்று விட்டிருந்த உணர்வுகளின் வேகங்களெல்லாம் மழுங்கிப்போக...

''ஏ... போடி... நானும் அப்பிடியில்லை'' என்று பற்களை நறுமிக்கொண்டு உரக்கக் கத்தியவனாய், இவளையும் விலத்திக் கொண்டு பொது அறைக்கு வெளியே விரைந்து மறைகிறான் இவன்.

இவள் தனக்கு ஏற்பட்ட ஒரு அதிர்ச்சியில் திகைத்துப்போய் நிற்கிறாள்.

(யாவும் கற்பனை)

We have found a strange foot print on the shores of the unknown. We have devised profound theories, one after another, account for its origin. At last we have succeeded in reconstructing the creature that made the foot print. And lo! it is our own.

— **A. S. Eddington**

Dye

By

V. Wimalendran

Science 2nd Year

For a substance to act as a dye certain conditions must be fulfilled;

1) It must be of a suitable colour.

2) It must be able to fix itself or be capable of being "fixed" to the fabric.

3) When fixed, it must be fast to light and it must be resistant to the action of water and to a certain extent, to dilute acids and alkalis.

By the term dye we mean any compound which can, with some degree of permanence, be fixed upon a textile fiber as a colour. Substances commonly used as dyes may be classified according to origin as natural or synthetic. The natural dyes are divided according to their source into vegetable, animal, and mineral dyes.

From the entire list, early records show that the vegetable dyes, indigo alizarin and logwood and the animal dyes cochineal and tyrianpurple, have played an important part in commerce.

How the structure of Molecule affects colour:

It is thought by some investigators that the effect of the proximity of oxidizing and reducing components within the molecule is to decrease the frequency of the electrons, so that the frequency becomes that of the light Visible spectrum. The absorption of these rays results in colour. As the frequency of the electron decreases, the wave length increases and the colour deepens.

Theory of Dyeing:

A substance which contains the colour-giving group is called a chromogen. The colour-giving itself within the chromogen is known as the chromophore group.

The chromophore group contains double bond atoms.

By the process of oxidation or reduction these double bonds may shift and the chromophore groups thus be built up or destroyed. Bleaching is the process of the destruction either permanently or temporarily of the chromophore group. The presence then of a chromophore group gives colour to a compound, but inorder to fix the colour in a substance the presence of such radicals as OH, NH_2, NHR or NR_2 is necessary.

These radicals are called ausco-chromes or colour-fixing groups.

Classification of Dyes:

Dyes are classified according to their chemical constitution or by their application to the fibre.

(1) Nitro-dyes (2) Nitroso dyes (3) Azo-dyes (4) Diphenylmethane dyes (5) Triphenylmethane dyes (6) Dipheny-

lamine dyes (7) Heterocyclic dyes (8) Vat dyes (9) Naphthol dyes (10) Sulphur dyes (11) Anthraquinone dyes etc.

Classification according to application:

1. **Acid dyes** are the sodium salts of sulphuric acid and nitrophenols. They dye animal fibers directly, but not vegetable fibers, they are mostly applied to wool and silk.

2. **Basic dyes** are mostly the salts of colour bases with Zinc chloride They dye animal fibers directly, and vegetable fibers have been mordanted with tanin. Basic dyes are mostly applied to cotton and silk.

3. **Direct dyes** They dye animal and vegetable fibers directly, but require a directly m rdant. If the dye is acidic the mordant must be basic, if the dye is basic then the mordant must be acidic. For acidic dyes the mordants are mettalic hydroxides, for basic dyes the mordadt is tannic acid.

4. **Vat dyes** are insoluble in water but are reduced by alkaline sodium hyposulphite to alkali-soluble compounds. When they are readily reoxidised to the dye. These reduced compounds are often white or colourless, and so are called euco-compounds. Dyes in the leuco-condition dye both animal and vegetable fibers directly. Vat dyes are used mostly on cotton.

6. **Ingrain or developed dyes** are dyes which are produced in the fibre. They are divided into three broad groups.

7. **Sulphur dyes** are dyes containing sulphur, and are soluble in aqueous sodium sulphide. Sulphur dyes are used for vegetable fibers, the being regenerated in the fabric by oxidation in the atmosphere or by oxidation with dilute aquous patassium dichromate.

Rayon dyes

Viscos rayon: In the viscose process cellulose is digested with sodium hydroxide solution and then carbon disulphide is passed into the solution. A mixture of sodium cellulose X anthates soluble in sodium hydroxide is formed. This alkaline solution has a high viscosity and hence the silk obtained by this process was named viscose ray n. The viscose solution is forced through a sulphuric acid bath, whereupon cellulose is precipated af fine threads. After that the threads can be dyed in usual way

---

The gods did not reveal all things to men at the start; but as time goes on, by searching, they discover more and more.

— Xenophanes

චන්ද්‍රිකා පණිවුඩ හුවමාරුව ශ්‍රී ලංකාව.

බී අබේනන්දන පෙරේරා (1 වන වසර)

ඒ 1945 වර්ෂයයි. Wireless World සඟරාවේ පලමු ලිපියක් ගැන කවුරුත් කතා කරන්නට වූහ. සුප්‍රසිද්ධ විද්‍යා ලේඛකයකු හා බ්‍රිතාන්‍ය රාජකීය හුවන් හමුදාවේ රාඩාර් විශේෂඥයකු වූ ආතර් සී. ක්ලාක් මහතා විසින් ඒ ලිපිය ලියා තිබුණේ රට රටවල් අතර පණිවුඩ හුවමාරුව ලෙහෙසි කරවීමට අභ්‍යවකාශයට යවන චන්ද්‍රිකා උපයෝගී කරගත හැකි අන්දම ගැනය. පණිවුඩ හුවමාරු කරනවා තබා අභ්‍යවකාශයට චන්ද්‍රිකාවක් යැවීමත් ඒ වන විට සිහිනයක්ව තිබූ බැවිනි කවුරුත් ඒ ගැන ප්‍රදමයෙන් කතා කරන්නට වූයේ.

හුවන් විදුලි තරංග සරල රේඛීය මාර්ගයක පමණක් ගමන් කරයි නමුත් පෘථිවිය ගෝලාකාරය. මේ හේතුවෙන් පොළවේ දෙපැත්තේ පිහිටි රටවල් 2 ක් අතර, හුවන් විදුලි තරංග මගින් පණිවුඩ හුවමාරු කර ගැනීම ඉතා අපහසු කරුණකි. ඇතර් සී. ක්ලාක් මහතා පෙන්වා දුන් පිරිදි ඇත අභ්‍යවකාශයට යැවූ චන්ද්‍රිකාවකට පෘථිවියේ දෙපැත්තේ පිහිටි මේ ලක්ෂය 2 ම පෙනෙයි එවිට, කෙලින්ම පණිවුඩය යැවීම සඳහා ඉහත චන්ද්‍රිකාව පරාවර්තක පෘෂ්ඨයක් ලෙස උපයෝගී කර ගත හැකි වෙයි.

ඊට දෙලොස් වසකට පමණ පසු රුසියාව ලොව ප්‍රථම කෘතිම චන්ද්‍රිකාව වන 'ස්පුට්නික් 1' හුවන් ගත කළාය. 1958 ජනවාරි 31 වනද එනම් 1957 ඔක්තෝබර් 7 වනද 'ස්පුට්නික් 1' හුවන් ගත කළාට පසුව, අමෙරිකාවද සීඝ්‍ර ප්‍රථම චන්ද්‍රිකාව වන 'එක්ස්ප්ලෝරර් 1' හුවන් ගත කළාය. අභ්‍යවකාශයේ කෘතිම වස්තූන් සැරිසරන යුගය මින් ඇරඹුණි. ආතර් සී ක්ලාක් මහතාගේ මතය පිළිබඳ පර්යේෂණද ඒ සමගම අරඹන ලදි.

අමෙරිකාවේ American Telephon and Telegradh Comany නම් සමාගමත් National Aeoronautics and Space Administrative හෙවත Nasa ආයතනයත් එක් වී කරන ලද පර්යේෂණයක ප්‍රතිඵලයක් වශයෙන් ප්‍රථම ක්‍රියාකාරී පණිවුඩ හුවමාරු චන්ද්‍රිකාව වන Telstar I 1962 ජූලි 10 ද හුවන් ගත විය. ඒ සඳහා කරන ලද පර්යේෂණ මගින් කරුණු රැසක් අනාවරණය විය. එනම්, පෘථිවිය වටා ගමන් කරන චන්ද්‍රිකාව පෘථිවියේ භ්‍රමණයට සාපේක්ෂව නිශ්චල විය යුතුය මේ සඳහා චන්ද්‍රිකාව පෘථිවියට කි. මි. 35, 800 (හැ 22, 300) පමණ ඈත කක්ෂයකට යවන ලදි. එවිට චන්ද්‍රිකාව පෘථිවියේ යම් ලක්ෂ්‍යයකට ඉහළින් සෑම විටම පිහිටයි මේ චන්ද්‍රිකාවට පෘථිවියේ $\frac{1}{3}$ පමණ වූ ප්‍රදේශයක් දැකීමය වෙයි මුළු ලෙවේම පණිවුඩ හුවමාරුව සඳහා මෙවැනි චන්ද්‍රික 3 ක් වත් අඩුගණනේ සඳවිය යුතු බවද හෙළිවිය.

පණිවුඩ හුවමාරුව පිළිබඳ ආතර් සී. ක්ලාක් මහතාගේ අදහස ප්‍රායෝගිකව සාර්ථක වූ පසු, අන්තර්ජාතික පණිවුඩ හුවමාරුව සඳහා සංවිධානයක් ආරම්භ විය International Telecommunication Satellite Consortium හෙවත් Intelsat යන නමින් 1964 දී රටවල් 12 ක් එක්වී ඒ සංවිධානය ඇතිකරගති අපේ ශ්‍රී ලංකාවද Intelsat සංවිධානයේ මුල්ම සාමාජිකාවක් වෙයි දැන් එහි සාමාජික රටවල් ගණන 91 දක්වා වැඩිවී තිබේ.

Intelsat සංවිධානය යටතේ එහි මුල්ම චන්ද්‍රිකාව වන Intelsat I (Early Bird නමින්ද එය හැඳින් විය.) චන්ද්‍රිකාව 1965 ජූනි මාසයේදී හුවන්ගත වී අත්ලන්තික් සයුරට ඉහළින් නවතා තිබුණි. ටෝකියෝ නුවර පැවැත් වූ ඔලිම්පික් ක්‍රීඩා තරඟය පිළිබඳ රූපවාහිනී වැඩ සටහන් Intelsat I චන්ද්‍රිකාව හරහා ප්‍රචාරය විය. එය චන්ද්‍රිකා මගින් ප්‍රචාරය කළ පළමු රූපවාහිණී ප්‍රචාරය වශයෙන් ඉතිහාස ගත වෙයි.

චන්ද්‍රිකා හරහා පණිවුඩ හුවමාරුව සඳහා පොළව මතුපිට චන්ද්‍රිකා පෘථිවි මධ්‍යස්ථාන [Satellite Earth Station] පිහිටුවිය යුතුය. Intelsat I ට පුළුවන් වූයේ වරකට මෙවැනි පෘථිවි මධ්‍යස්ථාන දෙකක් සමග පමණක් සම්බන්ධ වීමටය. නමුත් දැන්, පෘථිවි මධ්‍යස්ථාන ඕනෑම ගණනක් සමග එකවිට සම්බන්ධව ක්‍රියා කළ හැකි ලෙස දියුණු කළ Intelsat චන්ද්‍රිකා 8 ක් පෘථිවි කක්ෂය වටා සේවයේ

සොදවා ඇත. දියුණු කළ අලුත්ම චන්ද්‍රිකාව Intelsat IV A යනුවෙන් හඳුන්වයි. දැනට සේවයේ ඇති චන්ද්‍රිකා 8 න් 4 ක් අන්ලන්තික් සාගරයට ඉහළින්ද, 2 ක් පැසිෆික් සාගරයට ඉහළින්ද, 2 ක් ඉන්දියන් සාගරයට ඉහළින්ද පෘථිවියට සාපේක්ෂ ලෙස නවතා ඇත.

ශ්‍රී ලංකා ජන රජයේ තැපැල් විදුලි සංදේශ ගරු අමාත්‍ය සී. කුමාර්සූරියර් මහතාගේ බලවත් උත්සාහය නිසා ශ්‍රී ලංකාවට ද දැන් චන්ද්‍රිකාව හරහා පණිවුඩ හුවමාරුවට හා රූපවාහිනී වැඩසටහන් ප්‍රචාරය කිරීමට පුළුවන් කම ලැබී තිබේ. චන්ද්‍රිකාව සමග සම්බන්ධ වීමට උපකාරවන Sitellite Earth Station හෙවත් චන්ද්‍රිකා පෘථිවි මධ්‍යස්ථානයක් පාදුක්කේ, මපේ ගමේ දැනට ඉදිකර ඇත ආසියානු සංවර්ධන බැංකුවෙන් ලැබුණු කෝටි 5 පමණ වූ ණය මුදලක් විශදම් කර, තැනූ මේ පෘථිවි මධ්‍යස්ථානය ලෝකයේ මෙතෙක් ඉදිකර ඇති වෙළඳ පණිවුඩ හුවමාරු චන්ද්‍රිකා පෘථිවි මධ්‍යස්ථාන 122 අතුරෙන් අලුත්ම මධ්‍යස්ථානයයි.

කොළඹ සිට සැතපුම් 23 පමණ දුරින් පිහිටුවා ඇති එම ව්‍යුහයට අඩි 97 ක විෂ්කම්භය ඇති විශාල ඇන්ටෙනාවක්ද අයත් වේ. කොළඹ කොටුවේ විදුලි සංදේශ ප්‍රධාන කාර්යාලයේ සිට Micro - Wave මගින් ලබා ගන්නා පණිවුඩ සංඥද එම විශාල ඇන්ටෙනාව මගින් ඉන්දියන් සාගර Intelsat චන්ද්‍රිකාව වෙත සම්ප්‍රේෂණය කරනු ලබයි. එම චන්ද්‍රිකාව මගින් නියමිත රටවල පෘථිවි මධ්‍යස්ථාන වෙතටත් එම පෘථිවි මධ්‍යස්ථාන මගින් නියමිත දුරකථන යන්ත්‍ර වෙතටත් ඒ පණිවුඩ සම්ප්‍රේෂණය කරනු ලැබෙයි.

චන්ද්‍රිකාව හරහා පණිවුඩ සැලීමට පෙර ශ්‍රී ලංකාවෙන් යැවූ සියලු පණිවුඩ පිටරටවලට යවනු ලැබුයේ මුහුද යටින් ඇද තිබෙන කම්බි තුළිනි. නමුත් දැනට ලැබෙන අති විශාල දුරකථන ඇමතුම් ප්‍රමාණය අනුව පිටරටට ඇමතුමක් ලබාගැනීමට අපට දින 6 ක් හෝ 7 ක් දක්වා සමහරවිට බලා සිටීමට සිදුවිය. එහෙත් චන්ද්‍රිකාව හරහා ඇමතුමක් සැලීමට මිනාඩ් 15 ඇතුලත අපට දැන් පුළුවන

1975 වසර මුලදී ඉදිකිරීම් කටයුතු අරඹා අවුරුද්දකටත් අඩුකාලයකදී පෘථිවි මධ්‍ය-ස්ථානය ක්‍රියාකාරී තත්වයට පත් කරවීමට විදුලි සංදේශ අමාත්‍යාංශය බලවත් උත්සාහයක් දැරිය. එහි ප්‍රතිඵලයක් වශයෙන් 1975 දෙසැම්බර් 20 ද සිට චන්ද්‍රිකාව හරහා පණිවුඩ සැලීමට අපට හැකියාව ලැබුණි. 1976 මැයි දෙ වනස, විශාල ජනකායකගේ සහභාගිත්වය මැද පාදුක්කේ පෘථිවි මධ්‍යස්ථානය ගරු අගමැතිනි සිරිමාවෝ බණ්ඩාරනායක මැතිතුමිය විසින් නිල වශයෙන් විවෘත කරනු ලැබිය. 1976 ජූලි 29 වනද පළමුවරට රූපවාහිනී ප්‍රචාරයක් ලංකාවේ සිට මේ චන්ද්‍රිකාව හරහා ලෝ පුරා විසුරුවා හරින ලදී.

පාදුක්කේ පෘථිවි මධ්‍යස්ථානය පිහිටු වීමේ වැදගත් කම ප්‍රායෝගිකව අපට දැකගත හැකිවූයේ පසුගිය නොබැඳි සමුළුව පැවති සමයේදිය. රටවල් 85 ක පමණ රාජ්‍ය නායක නායිකාවන් විශාල පිරිසක් සහභාගි වූ ඒ මහා සවුළුවේ සියළුම විස්තර රූපවාහිනී මගින් මුළු ලොව පුරා විසුරුවා හැරීමට ශ්‍රී ලංකාවට හැකිවූයේ පාදුක්කේ පෘථිවි මධ්‍යස්ථානය ඉදිකර තිබූ බැවිනි. තුදුරු අනාගතයේදී අඟහරු මත ඇවිදින මිනිසා අපට මෙහි සිට එවෙලෙම රූපවාහිනියෙන් දැකගත හැකිවනු ඇත,

චන්ද්‍රිකාව හරහා පණිවුඩ හුවමාරුව කළ හැකි බව පැවසූ ඒ ශ්‍රේෂ්ඨ විද්‍යාඥයා වන ආතර් සී ක්ලාක් මහතා දැන් ශ්‍රී ලංකාවේ සම්මාන පුරවැසි භාවය ලබා මෙහි පදිංචි වී සිටියි. ශ්‍රී ලංකාව චන්ද්‍රිකාව සමඟ සම්බන්ධ වීම ගැන ඔහු බලවත් ලෙස සතුටු වෙයි "මට දැන් ලොවපුරා විසිරී සිටින මගේ මිතුරන් සමග ඕනෑම විටෙක මගේ ගෙදර සටම කතා කළ හැකියි" යනුවෙන් ඔහු දැන් උද අනයි. අන්තර් ජාතික පණිවුඩ හුවමාරුව පහසු කරලීමට ක්ලාක් මහතාගෙ ලොවට වුනු සේවයට උපකාරයක් වශයෙන් දංග සම්පූර්ණ රූපවාහිනී උපකරන කට්ටලයක් පරිත්‍යාග කිරීමට ඉන්දියාව ඉදිරිපත් විය. එය දැනට ඔහුගේ කොළඹ පිහිටි නිවසේ සවිකර ඇත. චන්ද්‍රිකා වලින් කෙලින්ම රූපවාහිනී වැඩසටහන් ලබාගැනීමට ඔහුගේ රූපවාහිනී උපකරණ කට්ටලයට පුළුවන.

இரசாயனமும் உலகமும்

வ. விமலேந்திரன்
(விஞ்ஞானம் - இரண்டாம் வருடம்)

மனித இனம் தோன்றிய காலத்திலிருந்தே அவனது அறிவும் படிப்படியாக வளரத் தொடங்கியது. அதாவது மனிதன் நியாய கற்பனையுடன் சிந்திக்க ஆரம்பித்தான். அப்போது நாளுபக்கமும் சூழ்ந்திருக்கும் வித்தியாசமான பொருட்கள் அவன் அவதானத்தை ஈர்த்தன. எனவே அப்பொருட்களின் இயல்புகளைப் பற்றியும், பிரயோசனங்களைப் பற்றியும், நன்கறிவதற்கு இயற்கையாகவே ஆர்வம் ஏற்பட்டது. சுகபோகங்களுக்கு மட்டுமின்றி சீவனத்திற்கே முற்றாக இப்பொருட்களில்தான் தங்கியிருக்க வேண்டும். என அவன் உணர்ந்ததால் இந்த ஆர்வம் அடக்கமுடியாதாகி, இப்போது விஞ்ஞானத்தின் விளிம்புக்குச் சென்று கொண்டிருக்கும் இவ்விருபதாம் நூற்றாண்டில் வாழும் நமக்குப் பல விந்தைகள் தெரிந்திருக்கின்றன.

அன்றிலிருந்து இன்றுவரை மனிதன் தனது அறிவையும் ஆற்றலையும் கொண்டு இயற்கையை அடிமைப்படுத்த முயன்று வருகிறான். ஆனால் இயற்கையோ அடிபணிவது போன்று பணிந்து ஆத்திரம் கொள்கையில் அழிவினை உண்டுபண்ணுகிறது. இதனால் இன்றைய உலகம் இயற்கைக்குச் சவால் விடும் விஞ்ஞான உலகமாகத் திகழ்கிறது. இவ்வாறான விஞ்ஞான உலகில் இரசாயனம் பெரும் பங்கு பெறுகிறது என்றால் வியப்பில்லை. ஆனால் தற்போதுள்ள விஞ்ஞானத்தின் பலகிளைகளும் சடுதியாகவோ, திட்டவட்டமான ஓர் தனிச்சந்தர்ப்பத்திலிருந்தோ உற்பத்தியாகவில்லை. இக்கிளைகளுள் ஒன்றான இரசாயனம் எத்தனை உயிர்களின் நடுக்கத்தில், ஓயாத சிந்தனையில் உருப்பெற்று வந்துள்ளது என்பதை நாம் பல விஞ்ஞானிகளைப் பற்றி தெரியும் போது அறிந்து கொள்ளலாம்.

நாம் நமது வாழ்க்கையில் இரசாயனப் பொருட்களை மருந்தாக, உணவாக, உரமாக இன்னும் பல்வேறு வழிகளில் பயன்படுத்துகின்றோம். சில சமயங்களில் அவை உண்டாகும் போது உலகிற்கு அவை அளித்துள்ள தொல்லைகளை எண்ணினால் உள்ளம் நடுங்கும். இரசாயனமும், இயற்கையும் இருமுனைக்கத்திகள் போன்றவை. இவற்றைக்கையாளுகையில் மிகவும் விழிப்புணர்ச்சியுடன் இருக்க வேண்டும்.

நம் நாட்டை ஆளவந்த அன்னியர்கள் இங்கு தேயிலை, ரப்பர், தெங்கு விவசாய விளைபொருட்களை மட்டும் உண்டுபண்ணினார்கள். அத்துடன் நின்றுவிடவில்லை, அவர்கள் திறமை, எமது நாடு விவசாயத்திற்கே, உரிய நாடு என்று நம்வருட் சிலரை நம்பவைத்த பெருமையும்

அந்த ஆளவந்தார் கூட்டத்தையே சாரும். ஆகவே நம்நாட்டில் விவசாய வளம் பெருக, உரம் அவசியமாகிறது. விலங்குகளாலும், இயற்கையாலும் மாத்திரம் உரத்தின் தேவையைப் பூர்த்தி செய்யமுடியாது. இப் பற்றுக்குறையை ஈடு செய்ய இரசாயனப் பொருட்களில் உரமாக விளங்கும் [$(NH_4)_2 SO_4$] அமோனியம் சல்பேற்று, அமோனியம் நைத்திரேற்று [$NH_4 NO_3$] போன்ற பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன. இதில் அமோனியம் நைத்திரேற்று வெடிமருந்தாகப் பயன்படுத்தும்போது கவனம் அவசியமாகிறது. கவனையினத்தால் ஏற்படக்கூடிய அழிவுக்கு சில வருடங்களுக்கு முன்னர் அமெரிக்க நாட்டின் டெக்ஸால் நகரத்தில் நடைபெற்ற வெடிவிபத்து ஒரு சிறந்த உதாரணமாகும். ஒரு சிறிய நெருப்புப்பொறி அமோனியம் நைத்திரேற்று தூள்களில் விழுந்தமையாலேயே இவ் விபத்து ஏற்பட்டது. உயிர்வாழவும், உணவுப் பயிர்கள் வளரவும் துணைபுரியும் இப்பொருள் உயிருக்கே உலைவைத்து விட்டது.

இயந்திரயுகம் என அழைக்கப்படும் இந்நூற்றுண்டில் மிகக்குறுகிய காலத்தில் கூடியளவு தூரத்தை கடக்கக் கூடியவாறு போக்குவரத்து வசதியுள்ளது என்றால் அதற்கு காரணம் டீசல் எண்ணையே ஆகும். இது இயற்கையால் அளிக்கப்பட்ட இரசாயனப் பொருளாகும்' மாடிக் கட்டிடங்களும், மனதைக் கவரும் வானளாவிய கோபுரங்களும் இன்று நிலையாக நிற்கக் காரணம் உலோகப்பொருட்களும், இரசாயனப் பொருட்களுமேயாகும்.

பெண்களுக்கு மிகவிருப்பமுள்ள பொன், பிரித்தெடுக்கப்படுவது இரசாயனத்தின் பயனாகவேயாகும். வெள்ளி மூலாமிடப்படும் எத்தனையோ பொருட்கள் நமது வீடுகளில் அலங்காரப் பொருட்களாகவும், பாவனைக்குரியனவாகவும் பயன்படுத்துகின்றோம். மேலும் இருள் சூழும்போது இந்திரலோகமாக்கியும், விழாக்கொண்டாட்டங்களின் போது பளிச் பளிச்சென மின்னும் ஒளியையும், கண்சிமிட்டும் ஒளியையும் தரும் மின்சாரமும் இரசாயனக் கண்டுபிடிப்புக்களில் ஒன்றேயாகும். மனிதன் தன் வாழ்நாள் பூராவும் நுண்ணங்கிகளுடன் போராட வேண்டியதாயிருக்கிறது. விசேடமாக தனது உடல், உணவு ஆகியவற்றைப் பாதுகாப்தே பிரச்சனை. உடலைப்பாதுகாக்க விற்றமின்ஸ் போன்ற எத்தனையோ சத்துப்பொருட்களும், மருந்துகளும் இரசாயனத்தாலேயே தயாரிக்கப்படுகின்றன. இவ்வாறே உணவைப் பாதுகாக்க குளிரூட்டி பாவிக்கின்றோம். குளிர்ச்சியை உண்டாக்க இரசாயனப் பொருட்களே பயன்படுத்தப்படுகிறது என்பது யாவரும் அறிந்ததே.

இரசாயனத் தொழிலுக்கு மிக அவசியமாகத் தேவைப்படும் பொருட்களில் ஒன்று சோடியம் சிலிகேட் என்பது. சவர்க்காரம் செய்தல், பெட்ரோலியக் சுத்திகரிப்பு, குளிர்சாதனப் பெட்டி உற்பத்தி, காகித, காகித அட்டை உற்பத்தி,

கண்ணுடித்தொழிற்சாலை, ஜவுளிக ளுக்குச் சாயமிடல், நிலக்கரிச்சுரங்க வேலை, தீந்தை தயாரித்தல் முத லான எத்தனையோ காரியங்களுக்கு இது பயன்படுகிறது. இது நம் நாட் டின் பல பகுதிகளிலும் வேண்டாத பொருளாக எறியப்படும் உமியிலி ருந்து தயாரிக்கலாம் என்று அண் மையில் இரசாயன ஆராய்ச்சியாளர் கள் கண்டுபிடித்திருப்பதை நீங்கள் கேட்பின் ஆச்சரியமடைவீர்கள். உமியை எரிக்கும்போது கிடைக்கும் சாம்பலிருந்து சோடியம் சிலிகேட் டையும் கரியிலிருந்து காபனையும் பெறலாம் என்பது அவர்கள் கண்டு பிடிப்பு. சக்திமிக்க காபன் (C) இர சாயன உலகை சேதனம், அசேதனம் என இருபாகங்களாகப் பிரிக்கும் ஒரு இரசாயன மூலகம் என்பதை நாம் எல்லோரும் அறிந்ததே.

இவ்வாறு இரசாயனத்தையும் அதன் பிரயோகத்தைப் பற்றியும் அறிய அதன் அகராதியைப் புரட் டிக் கொண்டே போனால் அதன் ஒரு பகுதி இன்றைய உலகில் இர சாயனத்தின் தொடர்பு எவ்வளவு தூரம் மனிதனிடனும், சுற்றுடலு டனும் பின்னிப் பிணைந்துள்ளது, என்பது நமக்குத் தெரியவரும். அதே நேரத்தில் இன்னோர் பகுதி நாம் இரசாயனத்தால் பெறும் நன்மை களைப் போலவே அதனால் வரும் கேடுகளையும் சுட்டிக் காட்டுகின்றன. இதற்கு எத்தனையோ துயரச் சம்ப வங்கள் சான்று பகருகின்றன.

Self - reverence, Self - knowledge, Self - control,
These three alone lend life to sovereign power.....
Acting the law we live by without fear.

என்னைக்
கவிஞனுமாக்கி விட்டாய்

செல்ல. சபாநாதன்
(விஞ்ஞானம் – மூன்றும் ஆண்டு)

1. தலைவன் விருப்பம்

செல்லக் கிளி மொழியாள் ! – நீ
மெல்ல நடந்ததுவும்
அல்லி மலர் விழியாள் ! — நின்
மேனி மிளிர்ந்ததுவும் — கூந்தல்
முல்லை மலர் மாலை
மென்காற்றில் மிதந்ததுவும் — நீ
எல்லை இல்லா எழிலோடு
என்னை நோக்கியதும் — இவை
எல்லாமும் ஏதுவாகச்
சொல்லாமல் புகுந்து விட்டாய்
என்னுள் நீயிருந்து — என்னை —
என் நினைவுகளை
உன்மேல் இச்சை கொள்ளும்
— பச்சை நினைவுகளாய்
உன்னி எழச் செய்து விட்டாய்
அதனால்,

2. தலைவியை அணுகுதல்

மெல்ல நடந்து வந்தேன்
மெல்லியலாள் உனை உவந்து — பல
சொல்ல விரும்பி நின்றேன் — அவை
சொல்லாக அரும்பவில்லை — ஏனோ
பொல்லாத நாணம் என்னைச்
சொல்லாமல் தடுத்ததுவே.

3. உள்ளத் தவிப்பு

சொல்ல நினைத்ததுவும்
சொல்லாமல் சகித்ததுவும்
உள்ளம் தவித்ததுவும்
உள்ளூறச் சுகித்ததுவும்
துல்லிய அனுபவமாய்த்
துலங்கி நிற்குதம்மா

4. காதலின் கனிவு

கண்கள் கலந்ததுவும் — நம்
காதல் கனிந்ததுவும் — பின்
கண்கள் விரும்பியதும்
பண்கள் பிறந்ததுவும் — பொற்
பாவை நீ சிரித்ததுவும்
கோவை இதழ் விரித்ததுவும்
நினைவில் நீங்கவில்லை
நெஞ்சில் நிலைத்தனவே — என்
நெஞ்சை நிறைத்தனவே
கனவிலும் நீங்கவில்லை
காரிகையின் மலர்ந்தமுகம் — அது
தூரிகை வரையா வண்ணமுகம்

5. கனிந்த பின்னுல்

வெள்ளி நிலா முற்றத்தில் — நாம்
வெள்ளை மலர் கொய்திடுவோம்
அள்ளி அள்ளி அணைத்து நின்றே
பள்ளி நிலை எய்திடுவோம் — முன்
கள்ளப் பார்வை பார்த்ததெல்லாம்
உள்ளப் பரப்பில் பூத்து நிற்க — ஒரு
கொள்ளைப் பூரிப்பு உள்ளங்களில்
கொள்ளாமல் வழிந்திடுமே.

6. சொல்லில் அடங்காவே !

காதற் கதை பேசவென்று — உன்
பாதக் கமலங்கள் பார்த்து நிற்பேன் — என்
நெஞ்சம் ஏங்கும் நின் வரவு தேடி — என்னைத்
தஞ்சம் என நீ ஓடி வந்தால்
கிஞ்சித்தும் கிடையாது ஏக்கம் — உன்
கெஞ்சல் மொழியில் உள்ளம் குதுகலிக்கும்
வஞ்சி உனையே கருவாய்க் கொண்டு — கோடி
விஞ்சை நினைவுகள் கொஞ்சி விளையாடும் — அவை
அனைத்தையும் கவிதையாக
இழைத்திடச் சொற்கள் இல்லை — எனினும்
கவிதைக்கோர் பொருளானுய் — என்னைக்
கவிஞனுமாக்கி விட்டாய்.

(யாவும் கற்பனை)

CEREMONIAL RELEASE OF STABIPSS

The President K. Sivarajah
Addresses the Gathering

The Editor R. Rajakumar
Presents the first copy of STABIPSS
to the Chief Guest



The Chief Guest Prof. P. Kanagasabapathy
Addresses the Gathering



Prof. K. Indrapala introduces
The Magazine to the Gathering

TRIBUTES TO STABIPSS

Prof. K. Kailasapathy speaks in Commendation in Tamil



Mr. S. S. de Silva speaks in Sinhala

Dr. J. B. Selliah speaks in English

The secretary N. Sivarajan proposes the Vote of Thanks

சங்கமம்

இ. இராஜ்குமார்
(மூன்றும் வருடம்)

டாண் டாண்... டாண் டாண்... டாண் டாண்.....

